# PAPER 2 TET

# STUDY MATERIAL
# (SOCIAL STUDIES BATCH)

www.kalvisolai.com

**M.RAJASEKARAN BSc.B.Ed.,**
**SG ASST TEACHER,**
**PANCHAYAT UNION MIDDLE SCHOOL,**
**MARUDHAM ,**
**UTHIRAMERUR TALUK,**
**KANCHIPURAM DISTRICT.**
**EMAIL ID : sekarraja555@gmail.com**
**Mob : 9786466027**

# சமுதாய அமைப்புகள்

## சமுதாயம் :

- பல சமூகங்கள் ஒன்றோடு ஒன்று சார்ந்தும், சேர்ந்தும் வாழ்வது **சமுதாயம்** எனப்படும்.
- நம் உறவினர்கள், நம் பக்கத்து வீடுகளில் வசிப்பவர்கள், பள்ளியில் உடன் பிறந்தவர்கள், நம்முடன் சேர்ந்து விளையாடுவோர் - இவர்களெல்லாம் **நம்முடன் வாழும் சமூகத்தினர்.**
- நம்முடைய தெரு, வார்டு, ஊர், வட்டம், மாவட்டம், மாநிலம், நாடு எனச் **சமுதாயம்** விரிவடைகிறது.
- **"ஒற்றுமை, கடமை, உரிமை, பங்கேற்பு, பாதுகாப்பு, வளர்ச்சி"** ஆகியவை சமுதாயத்தின் உயிர்மூச்சு.

**சமூகம் :**

- **இன்பம், துன்பம்** ஆகிய உணர்வுகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு, சேர்ந்து வாழும் மக்கள் குழு **சமூகம் எனப்படும்.**
- ஒரே சமுதாயத்தில் பல சமூகங்கள் இருப்பதும் உண்டு.
- "இன்பம், துன்பம், கொரவம்" ஆகிய உணர்வுகள் **சமூகத்தின் நாடித்துடிப்புகள்"** ஆகும்.
- சமுதாயம், சமூகம் இவை இரண்டுமே ஒன்றோடு ஒன்று இணைந்த கூட்டு வாழக்கை அமைப்பாகும்.

**குடும்பம் :**

- குடும்பம் என்பது **நல்வாழ்வின் ஆதாரம்.** சமூகம் என்பது **நிம்மதியான வாழ்வுக்கு** வகை செய்கிறது.
- நமக்கு தெரிந்த முதல் சமுதாய அமைப்பு **குடும்பம்.**
- சமுதாயத்தின் அடிப்படை **குடும்பம்** ஆகும். குடும்பத்திற்கு அடுத்தப்படியாக **பள்ளிக்கூடம்** ஒரு சிறப்பு வாய்ந்த சமூக அமைப்பு ஆகும்.

**பள்ளி :**

- சமுதாய முன்னேற்றத்தின் விளை நிலம் - **பள்ளி.**
- பள்ளிச்சேவையின் முதன்மைப் பயனாளர்கள் - **சமுதாயத்தினர்.**
- சமுதாயத்தின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் அடிப்படை முதலீடு – **பள்ளிக்கல்வி**
- சமுதாயத்தின் ஆணிவேராக விளங்குபவர்கள் - **ஆசிரியர்கள்.**

www.kalvisolai.com

- மனித வாழக்கையின் தொடக்கத்தில் **குடும்பம், பள்ளி** என்ற இரண்டு சமுதாய அமைப்புகள் குழந்தைகளிடம் **குடிமைப் பண்புகளை** வளர்க்கின்றன.
- மனிதன் ஒரு சமூக விலங்கு என்று கூறியவர் – **கிரேக்க மேதை அரிஸ்டாட்டில்.**
- இந்திய மக்களின் முக்கியத் தொழில் - **வேளாண்மை.**
- இந்தியாவின் உயிர்நாடி **கிராமங்கள்** என்று கூறியவர் – **காந்திஜி.**

**சமுதாயத்தின் படிநிலை அமைப்பு :**

- தனிநபர் குடும்பம் சமூகம் சமுதாயம்.
- அரசாங்கத்தையும் பொது மக்களையும் இணைக்கும் பாலமாக அலுவலர்கள் உள்ளனர்.

**நிருவாகத் துறை அலுவலர்கள் :**

- நிருவாகத்துறை அலுவலர்களின் படிநிலை அமைப்பு மாவட்ட ஆட்சியர் மாவட்ட வருவாய் அலுவலர் கோட்ட வருவாய் அலுவலர் வட்ட ஆட்சியர் வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அலுவலர்.
- மாவட்ட ஆட்சியர், இவர்கள் அத்தனை பேருக்கும் தலைமை அலுவலராக இருந்து அரசிடமிருந்து வரும் ஆனைகளை நடைமுறைப்படுத்துவார்.
- மாவட்ட வளர்ச்சிப் பணிகள், திட்டங்கள் முதலியவற்றை நிறைவேற்றுதல் மாவட்ட ஆட்சியரின் பொறுப்பாகும்.
- ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று “மக்கள் குறை தீர்க்கும் நாள்” கடைபிடிக்கப்படுகிறது.

# மக்களாட்சி

**மக்களாட்சி - வரையறை :**

மக்களாட்சி என்பது “மக்களால் மக்களுக்காக மக்களே ஆட்சி செய்வது”ஆகும்.

- மக்களாட்சிக்கு வரையறைக் கூறியவர் – அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்.
- மக்களாட்சி என்பது மக்கள் அதிகாரத்தைக் குறிக்கிறது.

www.kalvisolai.com

- சமீப காலங்களில் சிறந்த அரசாங்க முறையாக கருதப்படுவது மக்களாட்சி (அ) ஜனநாயகம்.

- மக்களாட்சி என்னும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் - எரோடேட்டஸ்.
- சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் எரோடேட்டஸ் என்பவரால் மக்களாட்சி என்ற சொல் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது.

- மக்களாட்சியில் நாட்டின் குடிமகனே ஆள்பவரும், ஆளப்படுபவரும் ஆவார்.

- ஒரு மக்களாட்சி நாட்டில் அதிக அதிகாரம் கொண்டவர்கள் - மக்கள்.

- மக்களாட்சி என்பதன் ஆங்கிலம் சொல் - Democracy.

- Democracy என்ற வார்த்தை கிரேக்க சொல்லான Demos (ம) Cratia என்ற சொற்களில் இருந்து பெறப்பட்டதாகும்.

- Demos என்பது மக்களையும், Cratia என்பது அதிகாரம் (அ) ஆட்சியைக் குறிக்கும்.

- மக்களாட்சி முறை 2 வகைப்படும்.

அவை.

1. நேரடி மக்களாட்சி முறை,
2. மறைமுக மக்களாட்சி முறை.

நேரடி மக்களாட்சி :

- மக்கள் நேரடியாக மக்களாட்சி முறையில் பங்கேற்பர்.

- பண்டைய கிரேக்கம் (ம) ரோமாவில் நாகரிகத்தில் நடைபெற்று வந்தது.

- பண்டைய இந்தியாவில், கிராம பஞ்சாயத்து முறையில் நேரடி மக்களாட்சி நடைபெற்றது.

மறைமுக மக்களாட்சி :

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மக்கள் மறைமுகமாக மக்களாட்சியில் பங்கு கொள்கின்றனர்.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அரசாங்கத்தை உருவாக்கி நடத்துவர்.

- பெரும்பாலான நாடுகளில் மறைமுக மக்களாட்சி நடைபெறுகிறது.

- மறைமுக மக்களாட்சி முறை நடைபெறும் நாடுகளுள் சில - இந்தியா, இலங்கை, பாகிஸ்தான்……

www.kalvisolai.com

# அரசியல் கட்சிகள்

**அரசியல் கட்சி :**

மக்கள் ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டு தேர்தலில் பங்கேற்று ஆட்சியமைக்கும் அதிகாரத்தை பெறச்செய்யும் அமைப்பு அரசியல் கட்சி ஆகும்.

- அரசியல் கட்சியானது தலைவர், செயல் உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் ஆகிய மூன்று அமைப்புகளைக் கொண்டு செயல்படுகிறது.
- அரசியல் கட்சியானது படிநிலை நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது.
- கட்சியின் உயர்நிலைப்பகுதி தலைவர் பதவியாகும்.
- தலைவருக்கு உதவிட செயலர் மற்றும் பொருளாளர் உள்ளனர்.
- இவர்களுடன் கட்சிப்பணி செய்திட செயற்குழு உள்ளது.
- செயற்குழு அவ்வப்போது கூடி பிரச்சினைகளை விவாதித்து கலந்துரையாடி முக்கிய முடிவுகளை எடுக்கின்றது.
- கட்சியின் பொதுக் குழு கூட்டம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை நடைபெறும். அதில் கட்சியின் தீர்மானங்களும் செயல்பாடுகளும் வரையறுக்கப்படுகினறன.

**அரசியல் கட்சியின் செயல்பாடுகள் :**

- வாக்காளர்களிடம் தங்கள் கட்சிக்கொள்கைகளையும், திட்டங்களையும் முன் வைக்கின்றன.
- சட்டங்கள் உருவாக்குவதில் தீர்மானிக்கும் பங்கு வகிக்கின்றன.
- பொதுக்கருத்துக்களை உருவாக்குகின்றன.
- ஆட்சி அதிகாரங்களில் பங்கு பெறுவதை தங்கள் நோக்கமாக கொண்டிருக்கின்றன.

**கட்சி முறையின் வகைகள் :**

1. ஒரு கட்சி ஆட்சி முறை.
2. பல கட்சி ஆட்சி முறை.

**ஒரு கட்சி ஆட்சி முறை :**

- இம்முறையில் ஒரு நாட்டில் ஒரு கட்சி ஆளுங்கட்சியாகவும், மற்றொரு கட்சி எதிர்க்கட்சியாகவும் இருக்கும்.
- இது மக்களாலும் அரசியலமைப்பாலும் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கும்.

www.kalvisolai.com

- எத்தகைய எதிர்ப்பும் இன்றி அரசியல் அதிகாரத்தைப் பெற்று செயல்படும்.
- மற்ற கட்சிகள் செயல்படாது.
- கியூபா, சீனா போன்ற நாடுகளில் ஒரு கட்சி ஆட்சிமுறை நடைபெறுகிறது.

**இருகட்சி ஆட்சி முறை :**

- இம்முறையில் ஒரு நாட்டில் ஒரு கட்சி ஆளுங்கட்சியாகவும், மற்றொரு கட்சி எதிர்க்கட்சியாகவும் இருக்கும்.
- எதிர்க்கட்சி ஆளுங்கட்சியின் செயல்பாடுகள் (ம) குறைகளை சுட்டிக்காட்டி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இரு கட்சி ஆட்சிமுறை நடைபெறுகிறது.

**பலகட்சி ஆட்சி முறை :**

- இம்முறையில் ஒரு நாட்டில் இரண்டிற்கும் மேற்பட்ட கட்சிகள் இருக்கும்.
- இந்தியா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பல கட்சி ஆட்சி முறை நடைபெறுகிறது.

**இந்திய அரசியல் கட்சிகள் :**

இந்திய அரசியல் கட்சிகள் 2 வகைப்படும்.

1. தேசியக் கட்சி.
2. மாநிலக் கட்சி

**தேசியக் கட்சிகள் :**

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களில் 6% வாக்குகளைப் பெறும் கட்சிகள் தேசிய கட்சிகள்.

(எ.கா : ) காங்கிரஸ், பா.ஜ.கா, சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ்வாதி.

**மாநிலக் கட்சிகள் :**

மாநில சட்டசபைத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6சதவீதம் வாக்குகளைப் பெற்று குறைந்த பட்சம் 2 இடங்களைக் கைப்பற்றும் கட்சிகள் மாநிலக் கட்சிகள் .(அ) பிராந்தியக் கட்சிகள்.

(எ.கா : ) தி.மு.க, அ.தி.மு.க, தெலுங்கு தேசம்.

- தேர்தலில் வாக்களிக்கும் வயது -18 வயது.
- 25 –வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் தேர்தலில் போட்டியிட உரிமையுள்ளவர்கள்.

- இந்தியாவில் நடைபெறும் தேர்தல் முறைகள் 2 வகைப்படும்.
  1.நேரடித் தேர்தல் முறை,
  2.மறைமுகத் தேர்தல் முறை.

**நேரடித் தேர்தல் முறை :**

- நேரடித் தேர்தல் முறையில் குடிமக்கள் தாங்களே நேரடியாக வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- இம்முறையில் சட்டமன்ற (ம) நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (உதாரணம் : MLA, MP )

**மறைமுகத் தேர்தல் முறை :**

- மறைமுகத் தேர்தல் முறையில் குடிமக்கள் நேரடியாக தங்களது வாக்குகளை செலுத்தாமல், தங்களின் பிரதிநிதிகளைக் கொண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினர்கள் (Rajya Sabha), குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர் இம்முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**இடைப்பருவத் தேர்தல்:**

சில சமயங்களில் நாடாளுமன்றமோ (அ) மாநில சட்டசபைகளோ அது செயல்படுவதற்குரிய ஆண்டுகள் முழுமையும் (5 ஆண்டுகள்) பல்வேறு காரணங்களால் செயல்பட முடியாது. இடையில் கலைக்கப்பட்டால், மீண்டும் அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படும்.

- பொதுத் தேர்தல்/சட்டமன்றத் தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும்.
- எதிர்க்கட்சித் தலைவர் ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

**தேர்தல் ஆணையம் :**

- இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி உருவாக்கப்பட்டது.
- நாடாளுமன்ற (ம) மாநில சட்டசபைகளுக்கு தேர்தலை நடத்துகிறது.
- இது ஒரு சுதந்திரமான அமைப்பு ஆகும்.
- தன்னிச்சையானது.
- தலைமையிடம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- இந்திய தேர்தல் ஆணையம் “நிர்வாச்சன் சதன்” என்று அழைக்கப்படும்.

www.kalvisolai.com

- இந்திய தேர்தல் ஆணையம் 3 நபர்களைக் கொண்டது.
- 1 தலைமை தேர்தல் ஆணையர் (ம) அவருக்கு இணையான 2 உறுப்பினர்கள் தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்படுகின்றனர்.
- புதவிக்காலம் 6 ஆண்டுகள்.
- தலைமைத் தேர்தல் ஆணையர், உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையான அதிகாரம் பெற்றவராவார்.
- தற்போதைய இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் S.Y.குரோஷி மற்ற தேர்தல் ஆணையர்கள் V.S.சம்பத், அரிசங்கர் பிரம்மா.

**தேர்தல் ஆணையத்தின் பணிகள் :**

1. அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளிப்பது.
2. தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும், தனி வேட்பாளருக்கும் தேர்தல் சின்னங்களை ஒதுக்குவது.
3. வாக்களிக்கும் நாட்களையும் வாக்குகள் என்னப்படும் நாட்களையும் அறிவித்தல்.
4. தேர்தல் இறுதி முடிவுகளை அறிவிப்பது.

**தலைமை தேர்தல் அதிகாரி :**

- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு தலைமைத் தேர்தல் அதிகாரி இருக்கிறார்.
- இவரை மாநில அரசாங்கத்தின் ஒப்புதலோடு குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.
- தற்போதைய தமிழகத்தின் தலைமைத் தேர்தல் அதிகாரி – பிரவீன்குமார்

## இந்திய அரசியலமைப்பு

**அரசியலமைப்பு :**

அரசியலமைப்பு என்பது, அரசியல் முறைகளின் அடிப்படை கோட்பாடுகள் உடைய தொகுப்பாகும். இதன் அடிப்படையிலேயே நாட்டு மக்கள் ஆளப்படுகின்றனர்.

- 1929 –ல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு லாகூரில் நடந்தது.

www.kalvisolai.com

- லாகூர் காங்கிரஸ் மாநட்டு தீர்மானத்தின் படி, “பூரண சுயராஜ்யம்” 1930ம் ஆண்டு, ஜனவரி 26-ம் நாள் கொண்டாடப்பட்டது.
- 1934-ம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை உருவாக வேண்டும் என்று முதன் முதலில் குரல் எழுப்பப்பட்டது.
- இந்திய அரசியலமைப்பை உருவாக்க அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்ட ஆண்டு -1946.
- அமைச்சரவை தூதுக்குழுவின் (கேபினெட் தூதுக்குழு) பரிந்துரையின் அடிப்படையில் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது.
- அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் Dr.சச்சிதாநந்தா சின்கா தலைமையில் 1946, டிசம்பர் 9-ம் தேதி நடைபெற்றது.
- பிறகு அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் நிரந்தர தலைவராக Dr.இராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**இவர் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

- அரசியல் நிர்ணய சபையானது, அரசியலமைப்பு சட்டமியற்றும் பணியை வரைவுக்குழுவிற்கு அளித்தது.
- அரசியல் அமைப்பு வரைவுக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ஆகஸ்ட் 29, 1947.
- வரைவுக்குழுவின் தலைவர் – Dr.B.R.அம்பேத்கார்.
- வரைவுக் குழு அமைக்கப்பட்டபொழுது மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை = 6+1= 7பேர்

தலைவர் -1 தலைவர் Dr.B.R.அம்பேத்கார்.

உறுப்பினர்கள் -6. உறுப்பினர்கள்

1. N.கோபால்சுவாமி ஐயங்கர்,
2. ஆலடி கிருஷ்ணசாமி ஐயர்,
3. Dr.K.M.முன்சி,
4. சையத் முகமது சாதுல்லா,
5. B.L.மிட்டர்,
6. T.T.கிருஷ்ணமாச்சாரி.

“B.L.மிட்டர்”ருக்கு பதிலாக N.மாதவராவும், T.T.கிருஷ்ணமாச்சாரிக்கு பின் D.P.கேத்தானும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

- இந்திய அரசியலமைப்பு சிற்பி –Dr.B.R.அம்பேத்கார்.
- இங்கிலாந்து, ரஷ்யா, அயர்லாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து போன்ற 60-க்கும் மேற்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்து அதிலுள்ள சிறப்புக் கூறுகளை பின்பற்றி இந்திய அரசியலமைப்பு எழுதப்பட்டது.

www.kalvisolai.com

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதி முடிக்கப்பட்ட ஆண்டு 26, 1949.
- அரசியலமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்ற ஆண்டு டிசம்பர் 9, 1946.
- அரசியலமைப்பு நிர்ணய சபையின் கடைசி கூட்டம் கூடிய ஆண்டு ஜனவரி 24, 1950.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு ஜனவரி 26, 1950.
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு ஜனவரி 26, 1950.
- அரசியலமைப்புச் சட்டம் எழுதி முடிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் - 2ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாட்கள்.
- 11 திட்டமிட்டக் கூட்டங்களில் அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி கலந்துரையாட 114 நாட்கள் ஆயிற்று.
- ஜனவரி 26 – குடியரசு தினம்
  ஆகஸ்ட் 15 – சுதந்திர தினம்
  நவம்பர் 26 – சட்ட தினம்.
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் தற்பொழுது 22 பாகங்கள், 12 அட்டவணைகள், 449 விதிகள் உள்ளன.
- இந்திய அரசியல் அமைப்பின் சிறப்பியல்புகள் :
  -முன்னுரை

-இறையாண்மை -
மதச்சார்பின்னை
-பாராளுமன்ற அரசுமுறை -
எழுதப்பட்ட அரசியலமைப்பு -
உலகிலேயே நீண்டது
பகுதி நெகிழும், பகுதி நெகிழாத் தன்மை கொண்டது -
சுதந்திரமான (ம) வலுவான நீதித்துறை
அரைக் கூட்டாட்சி
அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்
அடிப்படை உரிமைகள்
நெருக்கடி நிலை பிரகடனம்
வயது வந்தோர் வாக்குரிமை
மூன்று அடுக்கு ஆட்சி முறை

- **முகவுரை : (முகவுரை)**
  - மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என்று கூறுகிறது.
  - இந்தியா ஒரு இறையாண்மையுடைய, சமதா்ம, மதச்சார்பற்ற, மக்களாட்சி, குடியரசு நாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- **இறையாண்மை :**

- மக்களே உயர் அதிகாரம் மிக்கவர்கள். இதுவே இறையாண்மை கோட்பாட்டின் அடிப்படை ஆகும்.
- இந்திய அரசியலமைப்பு சட்டம் மக்களுக்கு முழு உரிமைகளையும் வழங்கி உள்ளது.
- மத்திய, மாநில அரசுகள் மக்களிடமிருந்து அதிகாரத்தை பெறுகிறது.

➢ **மதச்சார்பின்மை :**

- இந்திய அரசின் தேசிய குறிக்கோள்களுள் ஒன்று.
- எல்லா மதங்களுக்கும் சுயவாய்ப்பும், சம மதிப்பும் தரப்படுகிறது.

➢ **பாராளுமன்ற அரசு முறை :**

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- அரசின் நிர்வாகக்குழு, சட்டமன்ற நடவடிக்கைகள் இவைகளுக்கு இப்பாராளுமன்றமே பொறுப்பு.
- இது பொறுப்பு அரசு (அ) காபினெட் அரசு என்று அழைக்கப்படும்.

**அடிப்படை உரிமைகள் :**

அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து பெறப்பட்டது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் பகுதி IIIலும், 12 முதல் 35 வரையிலான விதிகளில் அடிப்படை உரிமைகள் கூறப்பட்டுள்ளது.

1) **சமத்துவ உரிமை :**
சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை பற்றி கூறுகிறது.
விதி 14 முதல் 18 வரை உள்ளது.
விதி 14 – சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
விதி 17 – தீண்டாமை ஒழிப்பு.

2) **சுதந்திர உரிமை :**
விதி 19-22 வரையிலான விதிகளில் கூறப்பட்டுள்ளது. விதி 19-6 வகையான சுதந்திர உரிமைகள் பற்றி கூறுகிறது.

i. பேசுதல், எழுதுதல்
ii. அமைதியான முறையில் ஆயுதமின்றி கூடுதல்.
iii. சங்கங்கள் (ம) அமைப்புகள் ஏற்படுத்துதல்.
iv. நாடு முழுவதற்கும் சுதந்திரமாக சென்று வருதல்.
v. சுதந்திரமாக (ம) விரும்பிய வானிபம் செய்தல்.

3) **சுரண்டலில் இருந்து பாதுகாக்கும் உரிமை :**

விதி 23, 24ல் கூறப்பட்டுள்ளது.

www.kalvisolai.com

- மனிதனை வியாபாரப் பொருள் ஆக்குதலையும், தொழிலைச் செய்ய கட்டாயப்படுத்துதலையும் (ம) குழந்தைத் தொழிலாளர்களையும் தடை செய்கிறது.
- விதி 23 –மனிதர்களை கொண்டு வியாபாரம் செய்வது, பிச்சை எடுக்க வைப்பதை தடுத்தல்.
- விதி 24 –எந்த சமயத்தை 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை அபாயகரமான தொழில்களில் வேலைக்கு அமர்த்துவதை தடை செய்கிறது.

**4) சமய சுதந்திர உரிமை :**

- விதி 25 முதல் 28 வரையில் கூறப்பட்டுள்ளது.
- இதன்படி குடிமக்கள் எந்த மதத்தையும் பின்பற்ற உரிமை உள்ளது. விதி 25- எந்த சமயத்தை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு.

5) **பண்பாடு (ம) கல்வி உரிமைகள் :**

- விதி 29, 30-ல் கூறப்பட்டுள்ளது.
- விதி 29-அனைத்து குடிமக்களும் தாய்மொழி, கலாச்சாரத்தை, பண்பாட்டைப் பாதுகாக்கும் உரிமை உண்டு.
- விதி 30 – கல்வி நிறுவனங்களை நடத்தவும் சிறுபான்மையினருக்கு உரிமை உண்டு.

6) **அரசியலமைப்பிற்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை :**

- விதி 32 –ல் கூறப்பட்டுள்ளது.
- 6 விதமான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படும் போது எந்த ஒரு குடிமகனும் விதி 32 –ன் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுக உரிமை உண்டு.

**7) அடிப்படைக் கடமைகள் :**

- இரஷ்ய அரசியலமைப்பில் இருந்து பெறப்பட்டது.
- மொத்த அடிப்படைக் கடமைகள் 11.
- 11வது அடிப்படைக் கடமை – 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி பெறும் வாய்ப்பினை உருவாக்கி கொடுப்பது பெற்றோரின் கடமை.

www.kalvisolai.com

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பகுதி IVA –யிலும், விதி 51(A) – யிலும் 11 அடிப்படைக் கடமைகள் குறிப்பிடப்பட்டுள்ளது.
- விதி 21 (A) - இலவசக் கட்டாயக் கல்வியை 6-14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென 2009-ல் சட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

# இந்திய கலாச்சாரம் (ம) பண்பாடு

- ஆரம்ப காலத்தில் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறினார்.
- ஆரியர்களை தொடர்ந்து பாரசீகர்கள், கிரேக்கர்கள், குஷாணர்கள், ஈணர்கள், அரேபியர்கள், மங்கோலியர்கள், மொகலாயர்கள், (ம) ஐரோப்பியர்கள் இந்தியாவில் குடியேறினர்.
- இந்தியக் கலாச்சாரம் உலகில் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.
- கலாச்சாரம் என்பது **பண்**பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடு ஆகும்.
- கலாச்சாரம் மொழி, இனம், இலக்கியம், சமயம், தத்துவம், பழக்கவழக்கங்கள் போன்றவை மூலமாக வெளிப்படுகிறது.
- கலாச்சாரம் பன்முக சமுதாயத்தை உருவாக்குகிறது.

**மதம் :**

- சாதி, மதம், மொழி (ம) இனம் ஆகிய பிரிவுகளால் இந்திய மனித இனத்தைப் பற்றி படிக்கக் கூடிய அருங்காட்சியகமாகவும், ஆய்வகமாகவும் திகழ்கிறது.
- இந்தியா “மனித இனங்களின் அருங்காட்சியகம்” என்று அழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் பழமையான மதம் “வேத சமயம்” ஆகும்.
- கி.பி.முதலாம் நூற்றாண்டில் கிறித்துவ மதம் இயேசுவின் சீடர் செயிண்ட் தாமஸ் என்பவரால் கொண்டுவரப்பட்டது.
- பாரசீகர்களால் ஜொராஸ்டிரிய மதம் இந்தியாவில் பரப்பப்பட்டது.
- இந்தியாவில் தோன்றிய மதங்கள் - இந்து, புத்தம், சமனம், சீக்கியம்.

**மொழி :**

- இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை – ஏறத்தாழ 845 மொழிகள்.
- இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அலுவலக மொழிகளின் எண்ணிக்கை -22.
- இந்தியாவின் தேசிய ஆட்சி மொழி – தேவநாகிரி வடிவிலா இந்தி.

www.kalvisolai.com

- இந்தியாவின் இணைப்பு (நடைமுறை மொழி) - ஆங்கிலம்.
- இணைப்புக் கருவியான மொழி, தற்சமயம் பிரிவினை வாதத்தை தூண்டும் கருவியாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**இலக்கியம் :**

- இந்தியா, இலக்கியங்களின் கருவூலமாகத் திகழ்கிறது.
- இந்தியாவில் மாநிலங்கள் எதன் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன – மொழி
- சமஸ்கிருதம் (ம) பிற இந்திய மொழிகள் நமது எண்ணத்தையும், சிந்தனையையும் வளர்க்க உதவுகின்றன.
- இந்தியாவின் இருபெரும் இதிகாசங்கள் -இராமாயணம், மகாபாரதம்.
- திருக்குறள் தமிழின் மிகச் சிறந்த நூலாக கருதப்படுகிறது.
- சீறாப்புராணத்தை எழுதியவர் –உமறுப்புலவர். இந்நூல் முகம்மது நபியின் வாழ்க்கையைப் பற்றி கூறுகிறது.
- தேம்பாவணி என்னும் நூலை எழுதியவர் – வீரமாமுனிவர்.

| மதம் | | புனித நூல் |
|---|---|---|
| இந்துக்கள் | - | பகவத் கீதை |
| கிறித்தவர்கள் | - | புனித பைபிள் |
| இஸ்லாமியர்கள | - | திருக்குரான். |

விழாக்கள் :

சமய விழாக்கள் மக்களிடையே சகோதரத்துவத்தையும், நட்பையும், சமய சகிப்புத் தன்மையையும் வளர்த்து வருகிறது.

| மதம் | | முக்கிய விழாக்கள் |
|---|---|---|
| கிறித்துவம் | - | கிறிஸ்த்துமஸ், புத்தாண்டு விழா. |
| இந்துக்கள் | - | தீபாவளி, நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, |

பொங்கல், சித்திரை திருவிழா, ஆடிவெள்ளி,

வைகுண்ட ஏகாதேசி, ஸ்ரீராம நவமி, (ம)

கும்பமேளா. புத்த மதம் - புத்த பூர்னிமா சமண மதம் - மகாவீரர் ஜெயந்தி சீக்கிய மதம் - குருநானக் ஜெயந்தி

**கலை (ம) கட்டக்கலை :**

- அஜந்தா (ம) எல்லோரா ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவை.
- இந்தியா ஓவியங்கள் (ம) சிற்பக் கலையில் புகழ் பெற்று விளங்கி வருகிறது.
- காந்தக்கலை இந்தியாவின் சிற்பக் கலையின் பெருமையை பறை சாற்றுகின்றது.
- இந்திய கட்டிடக் கலைக்கு தலைச்சிறந்த எ.கா.விளங்குபவை – காசி, பத்ரிநாத், கேதர்நாத், ஹரித்துவார் கோயில்கள், முஸ்லிம் தர்காக்கள் கிறிஸ்த்துவ திருச்சபைகள், சாஞ்சி ஸ்தூபி, மவுண்ட் அபுவில் உள்ள சமணர் கோயில்.
- வட இந்தியாவில் உள்ள இந்துக்களின் புனிதத் தலங்கள் : காசி, மதுரா, ரிஷிகேஷ் (ம) ஹரித்துவார்.
- தென்னிந்திய கட்டிடக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குபவை.

| | | |
|---|---|---|
| மதுரை | - | மீனாட்சி அம்மன் கோயில். |
| தஞ்சாவூர் | - | பிரகதீஸ்வரர் ஆலயம். |
| மகாபலிபுரம் | - | குடைவரைக் கோயில். |
| காஞ்சிபுரம் | - | கைலாசநாதர் கோவில் (ம) வைகுண்ட பெருமாள் கோவில். |
| திருவண்ணாமலை | - | அருணாச்சலேஸ்வரர் ஆலயம். |

வேலூர் (ம) சிதம்பரம் கோயில்கள் சாந்தோம் திருச்சபை.

**இசை (ம) நடனம் :**

- இந்தியாவின் பல்வேறு நடனம் (ம) இசைக்கலைகள் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க பெரிதும் உதவுகின்றன.
- பரத நாட்டியம், குச்சுப்புடி, கதக்களி, மணிப்புரி, (ம) ஒடிசி போன்றவை இந்தியாவின் புகழ்பெற்ற நடனக் கலையாகும்.

www.kalvisolai.com

| மாநிலம் | | நடனம் |
|---|---|---|
| தமிழ்நாடு | - | பரதநாட்டியம் |
| ஆந்திரம் | - | குச்சுப்புடி |
| கேரளா | - | கதக்களி |

**(ஒடிசா) ஒரியா - ஒடிசி**

- இந்தியாவில் தோன்றிய இசைகள் - கர்நாடக இசை (ம) இந்துஸ்தானி இசை.
- 1956-ல் மொழி அடிப்படையில் இந்தியா பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன.
- மக்களாட்சி கொள்கைகளான இறையாண்மை, சமயசார்பின்மை, சமதர்மம் போன்றவை இந்திய தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.
- Nov 19 தேசிய ஒருமைப்பாட்டு தினம்.
- தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் காரணிகள் :
  - வகுப்பு வாதம், மொழி வாதம், சாதிபாகுபாடு, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், வட்டார ஏற்றத்தாழ்வுகள்.

# இந்திய தேசியக் குறியீடுகள் (National symbols of India)

- தேசியச் சின்னங்கள் நமது நாட்டின் ஒருமைப்பாட்டு அடையாளங்களாக உள்ளன. தேசியக்கொடி - மூவண்ணக்கொடி
- செவ்வக வடிவம்
- காவி, வெண்மை, பச்சை எனும் மூன்று வண்ணங்களால் ஆகும்.
- தேசிய கொடியின் நீள, அகல விகிதம் 3:2 எனும் விகிதத்தில் இருக்கும்.

www.kalvisolai.com

- தேசியக்கொடியின் மூன்று வண்ணங்கள் உணர்த்துபவை :
  காவி - தியாகம், தைரியம்.
  வெண்மை - உண்மை.
  பச்சை - இந்தியாவின் செழிப்பு, வளமான நிலம், பசுமை, நம்பிக்கை

- அசோக சக்கரம் கரு நீல நிறத்தில் மூவண்ணக் கொடியின் நடுவில் வெண்மைப் பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளது.

- அசோக சக்கரம் - அறவழியில் முன்னேறிச் சென்று அமைதியினையும், செழுமையினையும் பெற்றுத் தர தூண்டுகிறது.

- இந்த சக்கரத்தின் வடிவம் சாரநாத் அசோகத் தூணின் தலைப்பகுதிக்குக் கீழ் உள்ள வடிவம்.

- அசோக சக்கரத்தின் விட்டமும், வெள்ளைப்பட்டையின் அகலமும் சரிசம வீதத்தில் அமைந்துள்ளது.

- அசோக சக்கரத்தில் 24 ஆதாரங்கள் உள்ளன.

- இந்திய நாடாளுமன்றத்தால் நம் நாட்டின் தேசியக்கொடி ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் ஜீலை 22, 1947.

- சுதந்திர இந்தியாவில் முதல் முதலில் தேசியக் கொடி ஏற்றப்பட்ட நாள் - ஆகஸ்ட் 15, 1947.

- தேசியக் கொடிச் சட்டம் 2002 நடைமுறைக்கு வந்த நாள் - ஜனவரி 26

**தேசிய கீதம்** :

- நம் நாட்டின் தேசிய கீதம் - ஜன கன மன….. எனத் தொடங்கும் பாடல்.

- தேசிய கீதத்தை எழுதியவர் - இரவீந்திரநாத் தாகூர்.

- தேசிய கீதம் எம்மொழியில் இயற்றப்பட்டது – வங்காள மொழி.

- இரவிந்திரநாத் தாகூர் சார்ந்த மாநிலம் - வங்காளம்.

- தேசிய கீதம் பாட ஆகும் கால அளவு – 52 விநாடிகள் (53)

- தேசிய கீதம் முதன் முதலில் பாடப்பட்ட இடம் - கொல்கத்தா

- தேசிய கீதம் முதன் முதலில் பாடப்பட்ட ஆண்டு
  – டிசம்பர் 27, 1911.

- தேசிய கீதம் முதன் முதலில் பாடியவர் - இரவீந்திரநாத் தாகூர்.

- தேசிய கீதம் அரசின் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு

www.kalvisolai.com

– ஜனவரி 24, 1950.

- ஜன கன மன...... எனத் தொடங்கும் தேசிய கீதத்தில் எப்பத்தியில் உள்ளவற்றை பாடுகிறோம் - முதல் பத்தியில் உள்ள பாடலை.

**தேசிய சின்னம் :**

- தேசிய சின்னம் ஒரு சுதந்திர நாட்டின் அதிகாரத்தை உணர்த்துவதாக உள்ளது.
- நம் நாட்டின் தேசிய சின்னம் - அசோகர் ஏற்படுத்திய சாரநாத் தூணில் உள்ள சிங்கத் தலை கொண்ட உருவம்.
- தேசிய சின்னம் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு – ஜனவரி 26, 1950.
- இந்திய அரசின் (அரசாங்கத்தின்) அதிகாரபூர்வ முத்திரை – சிங்கத்தலை கொண்ட உருவம்.
- தேசிய சின்னத்தில் சிங்கங்கள் எதன் மீது உள்ளது – வட்ட வடிவமான பீடத்தில் அமர்ந்த நிலையில் உள்ளது.
- பீடத்தின் அடித்தட்டு பகுதியில் உள்ள விலங்குகள் - குதிரை, காளை.
- தேசிய சின்னத்தில் உள்ள வட்டவடிவமான பீடத்தின் அடிப்பரப்பு பகுதியில் இடப்புறம் உள்ள விலங்கு – குதிரை.
- தேசிய சின்னத்தில் உள்ள வட்டவடிவமான பீடத்தின் அடிப்பரப்பு பகுதியில் மத்தியில் (இடையில்) என்ன உள்ளது – தர்மசக்கரம்.
- தர்மசக்கரத்தின் கீழே என்ன எழுதப்பட்டுள்ளது (பொறிக்கப்பட்டுள்ளது) – “சத்யமேவ ஜெயதே”
- “சத்யமேவ ஜெயதே” என்பதன் பொருள் - வாய்மையே வெல்லும்.
- “சத்யமேவ ஜெயதே” என்னும் வாசகம் எம்மொழியில் எழுதப்பட்டுள்ளது. – தேவநாகிரி மொழி.
- தேசிய சின்னத்தில் உள்ள சிங்கம் எதனை உணர்த்துகிறது. –அதிகாரம், கம்பீரம்.
- தேசிய சின்னத்தில் உள்ள குதிரை எதனை உணர்த்துகிறது ஆற்றல், வேகம்.
- தேசிய சின்னத்தில் உள்ள காளை எதனை உணர்த்துகிறது – ஒரே சீரான தன்மையை விளக்குகிறது. (கடின உழைப்பு)
- தேசிய சின்னத்தில் உள்ள தர்மசக்கரம் எதனை உணர்த்துகிறது – தர்மம், அறவழி.

**தேசிய மலர் :**

- நம் நாட்டின் தேசிய மலர் – தாமரை
- தாமரை எதனை உணர்த்துகிறது (உருவகப்படுத்துகிறது) –ஒற்றுமை.
- இந்திய இலக்கியத்தில் உயர்ந்த இடமும் மதிப்பும் முக்கியத்துவமும் எம்மலருக்கு அளிக்கப்படுகிறது – தாமரை.

**தேசிய பறவை :**

- நம் நாட்டின் தேசிய பறவை – மயில்
- மயிலின் சிறப்பு என்ன? – தோகையின் அழகு.
- ஆண் மயிலுக்கு மட்டுமே தோகை உண்டு. பெண் மயிலுக்கு தோகை இல்லை.
- மயில் எதனை உணர்த்துகிறது - இயற்கை அழகு
- மயிலின் பெருமையைப் பற்றி கூறுவது - இந்திய இலக்கியங்கள்.

**தேசிய விலங்கு :**

- நம் நாட்டின் தேசிய விலங்கு – வங்கப்புலி.
- புலிக்கு முன்பு நம் நாட்டின் தேசிய விலங்காக எது இருந்தது – சிங்கம்
- சுதந்திரம் பெற்ற பிறகு இந்தியாவின் தேசிய விலங்காக எது இருந்தது – சிங்கம்
- புலி எதனை உணர்த்துகிறது – வலிமை, அச்சம்
- இந்தியாவின் தேசிய விலங்காக முதலில் எது தேர்வு செய்யப்பட்டு இருந்தது – சிங்கம்

**தேசிய பாடல் :**

- இந்தியாவின் தேசிய பாடல் - வந்தே மாதரம் எனத் தொடங்கும் பாடல்
- தேசியப் பாடலை எழுதியவர் – பக்கிம் சந்திர சட்டர்ஜி
- இந்தியாவின் தேசியப் பாடல் எதிலிருந்து எடுக்கப்பட்டது – “ஆனந்த மடம் எனும் நாவல்”
- “ஆனந்த மடம்” எனும் நாவலை எழுதியவர் – பக்கிம் சந்திர சட்டர்ஜி

www.kalvisolai.com

- பக்கிம் சந்திர சட்டர்ஜி நடத்திய "ஆனந்த மடம்" எனும் ஏட்டில் 1882-ல் தேசிய பாடல் வெளியிடப்பட்டது.
- தேசியப்பாடல் முதன் முதலில் பாடப்பட்ட இடம் - கொல்கத்தா
- தேசியப்பாடல் முதன் முதலில் பாடப்பட்ட ஆண்டு – 1986.
- தேசியப்பாடல் எழுதப்பட்ட மொழி – சமஸ்கிருதம்.
- தேசியப் பாடல் அரசியல் நிர்ணய சபையால் (அரசாங்கத்தால்) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு – ஜனவரி 24, 1950.

**தேசிய மொழி :**

- இந்தியாவின் அதிகாரப்பூர்வ தேசிய மொழி அதாவது ஆட்சி மொழி எது? - இந்தி
- இந்திய அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ள தேசிய மொழிகளின் எண்ணிக்கை -22.
- இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை – சுமார் 845 (1652)
- தேவநாகிரி வடிவிலான இந்தி மொழி, தேசிய மொழியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவின் இணைப்பு மொழி – ஆங்கிலம்

**தேசிய நாள் காட்டி :**

- இந்தியா விடுதலை பெற்றபோது பின்பற்றிய நாள்காட்டி முறை – "கிரிகோரியன் நாள்காட்டி முறை"
- தற்போது இந்தியா பினபற்றும் நாள்காட்டி முறை – சகா ஆண்டு நாள்காட்டி முறை.
- சகா ஆண்டு நாள்காட்டி முறை இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு -1957, மார்ச் 22.
- சுகா ஆண்டு நாள்காட்டியில் உள்ள மொத்த நாட்களின் எண்ணிக்கை – 365 நாட்கள்.

www.kalvisolai.com

**தேசிய மரம் :**

- இந்தியாவின் தேசிய மரம் - ஆலமரம்.
- இது நம் அனைவரையும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

**தேசிய நதி :**

- இந்தியாவின் தேசிய நதி –கங்கை
- கங்கையின் நீளம் சுமார் 2510 கி.மீ.
- கங்கை இந்துக்களின் புனித நதியாக கருதப்படுகிறது.

தேசிய நீர் வாழ் உயிரினம் - டால்பின்

தேசிய பழம் - மாம்பழம்

தேசிய விளையாட்டு - ஹாக்கி

www.kalvisolai.com